# கீழக்கரை நகர்மன்ற 29.09.2021–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

**பொருள் :1**

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவாகாரங்கள் அமைச்சகம் ஜல் ஜீவன் திட்டம் (Jal Jeevan Mission (Urban) அல்லது AMRUT 2.0) செயல்படுத்தும் பொருட்டு, இந்நகராட்சியில் சலைப்பதிவேடு பராமரிப்பதற்கு, இந்நகர்ப் பகுதியில் உள்ள சாலைகள், குடிநீர் விநியோகம், வடிகால், தெருவிளக்குகள் மற்றும் இதர அரசு கட்டிடங்கள் ஆய்வு மேற்கொண்டு நவீன முறையில் அளவீடு செய்து புகைப்படத்துடன் கூடிய அறிக்கைகள் தயார் செய்யும் பணி ரூ.9,20,000/– மதிப்பீட்டில் தனியார் தொழில்நுட்ப ஆலோசகர் (Private Technical Consultant) மூலம் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள இந்நகர்மன்றத்தில் 08.09.2021–ந்தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி மேற்காணும் பணி செய்து கொடுப்பதற்கு 15.09.2021–ந் தேதி விலைப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகளுக்கும் 17.09.2021 அன்று இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1 | M/s. Sai Sakthi Global Infra Surveys Pvt., Ltd No.2, 4th Main Road, Rajesh Nagar Extn, Pallikaranai, Chennai 600100 | Preparation of Survey and Asset Mapping of Road Network Rs.15000/ KM<br>Door to door survey to collect house hold details link water supply details Rs.60/ No<br>Excluding GST 18% |
| 2 | M/s. Global Surveys No.19 & 20, 3rd Main Road Rajesh Nagar Extn, pallikarai Chennai-600100 | Preparation of Survey and Asset Mapping of Road Network Rs.17000/ KM<br>Door to door survey to collect house hold details water supply details Rs.80/ No<br>GST 18% etc., |
| 3 | M/s. Geobasic Surveys & Constructions Old No.31, New No. 42, North Road, West C1 T Nagar, Chennai-600032 | Preparation of Survey and Asset Mapping of Road Network Rs.18200/ KM<br>Door to door survey to collect house hold details water supply details Rs.75/ No<br>Excluding GST 18% |

இந்நகராட்சி பொறியாளர்களின் பரிந்துரையின்படி மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் M/s. Sai Sakthi Global Infra Surveys Pvt., Ltd., Chennai நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையாளர் அவர்களிடம் 17.09.2021–ந் தேதி முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு புள்ளி விவர அறிக்கைகள் உடனடியாக அனுப்பும் பொருட்டு பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகர்ப் பகுதியில் உள்ள சாலைகள், குடிநீர் விநியோகம், வடிகால், தெருவிளக்குகள் மற்றும் இதர அரசு கட்டிடங்கள் ஆய்வு மேற்கொண்டு நவீன முறையில் அளவீடு செய்து புகைப்படத்துடன் கூடிய அறிக்கைகள் தயார் செய்து Soft Copy & Hard Copy கொடுப்பதற்கு மேற்காணும் நிறுவனத்திற்கு 17.09.2021–ந் தேதி பணி உத்தரவு வழங்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 519/2021/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1) மேற்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் M/s. Sai Sakthi Global Infra Surveys Pvt., Ltd., Chennai நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2) சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு புள்ளி விவர அறிக்கைகள் உடனடியாக அனுப்பும் பொருட்டு பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று M/s. Sai Sakthi Global Infra Surveys Pvt., Ltd., Chennai நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.895 அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :2</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுறுத்தியதன்படி, மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ந.க.எண்.495/2020/பி1, நாள்.17.09.2021–ந் தேதிய கடிதத்தில் இயற்கை இடர்பாடுகள் – வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக நகராட்சிப் பகுதியில் உள்ள கால்வாய்கள் மற்றும் மழைநீர் வடிகால்கள் தூய்மைப் படுத்தும் பணிகள் மேற்கொள்வதற்கு, நகரில் உள்ள அனைத்து மழைநீர் வடிகால்களையும் 100 சதவீதம் தூர்வாரி தூய்மைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி, இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் மழைநீர் வடிகால்கள், கல்வெட்டுகளையும் தூர் வாறி கழிவுகளை (Silt) அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் தூர்வாறும் பணி மேற்கொள்ளும் பொழுது மழைநீர் வடிகால் மேல் மூடிகள் உடைப்பு ஏற்பட்டு திறந்த நிலையில் உள்ளதால், புதிதாக மூடிகள் அமைப்பதற்கு இந்நகர் பொதுமக்கள் மற்றும் பொதுநல அமைப்புகளிடமிருந்து புகார்கள் வந்தம் வண்ணம் உள்ளது.

எனவே, பொது மக்கள் நலன் கருதி மழைநீர் வடிகால் மேல் மூடிகள் அமைக்கும் பணி செய்வதற்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ரூ.7,50,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதி அல்லது வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் இந்நகராட்சி பொறியாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது. ஆணையாளரின் அறிவுரையின்படி, மேற்காணும் பணியினை இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

<u>(கோப்பு எண். 285 /2021/இ1)</u>

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. இந்நகர் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.7,50,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.896 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் :3</u>

15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரை மான்யம் (CFC) 2020–21ன் கீழ், இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த 4 நகராட்சியில் சேகரமாகும் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளையும் சேர்ந்து கையாளுவதற்கு, 30 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையில் ஒருங்கிணைந்த எரியூட்டும் ஆலை (Dry Waste Generator) தனியார் பங்களிப்பு அடிப்படையில் (Public Private Partnership Mode) இராமநாதபுரம் நகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கில் (Compost Yard) நிறுவி ஆலையினை இயக்குதல் மற்றும் தொடர் பராமரிப்பு பணியை மேற்கொள்ளவும், எரியூட்டும் ஆலையினை மாதாந்திர பராமரிப்பு கட்டணத்தை விகிதாச்சார முறையில் பகிர்ந்தளிக்கும் பொருட்டு அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.372.00 லட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக 13.01.2021–ந் தேதிய தொலைபேசி செய்தியின்படி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெற்று வழிமுறையாக கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் மாவட்ட நகராட்சிகளில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளைசேர்த்து கையாள புதிதாக தினசரி 30 மெட்ரிக் டன் கையாளத்தக்க வகையில் ஒரு எரியூட்டும் ஆலை (Dry Waste Generator) விகிதாச்சார அடிப்படையில் செலவினத்தை பகிர்ந்து கொள்ளும் வகையில் அமைத்தல். | 74.40 |

இந்நிலையில், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில், மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்க இயலாத நிலை உள்ளதால், இப்பணியினை ரத்து செய்து, அதற்குப் பதிலாக மாற்றுப் பணிகள் தேர்வு செய்யுமாறு, மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் மண்டல செயற்பொறியாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி, கீழக்கரை நகராட்சிப் பகுதியில் பெறப்படும் மக்கும் குப்பைகள் மற்றும் இறைச்சி கழிவுகள் அனைத்தையும் அகற்றும் பொருட்டு கீழ்கண்டவாறு பணிகள் மேற்கொள்வதற்கு இந்நகராட்சி பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதி கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Supply, Delivery and Erection of Bio Methanation plant Machinery and Equipments in Keelakarai Municipality. | 40.00 |
| 2. | Construction of Biogas plant in Keelakarai Municipality. | 35.00 |

இந்நகராட்சிக்கு 15–வது மத்திய நிதிக்குழு ஆணைய பரிந்துரையின்படி 2020–21 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மானியத்தில் ரூ. 40 இலட்சம் மற்றும் ரூ. 35 இலட்சத்திற்குரிய மதிப்பீட்டு பணிகள் மேற்கொள்வதற்கு மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி கோரி கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண். 610/2020/இ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

1. 15–வது மத்திய நிதிக்குழு மான்யத்தின் கீழ் ரூ. 74.40 இலட்சம் மதிப்பீட்டிலான பணியை ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2. 15–வது மத்திய நிதிக்குழு மான்யத்தின் கீழ் ரூ. 40 இலட்சம் மற்றும் ரூ. 35 இலட்சம் மதிப்பீட்டிலான பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. இத்திட்டப்பணியின் கூடுதல் செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>தீர்மானம் எண்.897 அனுமதிக்கப்பட்டது.</u>

**பொருள் :4**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட மேலத்தெரு, மணியார்வெட்டை, SPM தெருவில் கழிவுநீர் உடைப்பு அடிக்கடி ஏற்பட்டு சுகாதார சீர் கேடு ஏற்படுவதால் அதனை சரி செய்து தருமாறு அப்பகுதி பொதுமக்களால் கோரப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, மேற்காணும் இடத்தினை நேரடியாக ஆய்வு செய்து கழிவுநீர் உடைப்பினை சரி செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்து பொறியாளருக்கு குறிப்பு அனுப்பப்பட்டது. மேற்காணும் இடத்தினை நேராய்வு செய்து, துப்புரவு ஆய்வாளர் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இவ்வலுவலக பொறியாளர்காளல் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, இவ்வலுவலக கடிதத்தின் மூலம் துப்புரவு ஆய்வாளக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள குறிப்பு அனுப்பப்பட்டதில், மேற்கண்ட இடம் ஆய்வு செய்யப்பட்டதில் வாறுகால் பைப்லைனில் போடப்பட்டுள்ள T" Joint எடுத்துவிட்டு, கழிவுநீர் பாக்ஸ் கட்டி புதிதாக பைப்லைன் அமைக்குமாறு இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் பொதுமக்கள் தினசரி பயன்படுத்தும் வீட்டு கழிவுகள் செல்ல நகராட்சி மூலம் PVC குழாய்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது வார்டுகளில் பல இடங்களில் PVC குழாய்கள் உடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் சாலையில் செல்வதால் பொதுமக்கள் சாலையை பயன்படுத்தவும், வாகன ஓட்டிகள் செல்லவும், பள்ளி செல்லும் குழந்தைகள் செல்லவும், மிகவும் சிரமமாக உள்ளது என பொதுமக்கள் மற்றும் முக்கிய பொது நல அமைப்புகளிடம் இருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளதால், பொது மக்கள் நலன் கருதி PVC குழாய்கள், தொட்டிகள் (Manhole) மற்றும் அதன் மூடிகளை மாற்றி அமைக்க இந்நகராட்சி பொறியாளர்களால் ரூ.6,00,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய செலவினங்கள் இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதி அல்லது வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் இந்நகராட்சி பொறியாளரால் அனுமதி கோரப்பட்டுள்ளது. ஆணையாளரின் அறிவுரையின்படி, மேற்காணும் பணியினை இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 582 /2021/இ1)

அலுவலகக் குறிப்பு:

1. இந்நகர் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.6,00,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.898அனுமதிக்கப்பட்டது.**

**ஒம்/—ப. சதீஷ்குமார்,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர்**
**கீழக்கரை நகராட்சி.**